

# ஸ்ரீரங்கம்

# ஸ்ரீரங்கம்

## வாழ்த்தும் மனம்

ஸ்ரீரங்கன் நினைப்பதென்ன
ஸ்ரீரங்கனே அறிவான்

ஸ்ரீரங்கன் நினைப்பதை
ஸ்ரீதேவியும் அறிவாள்

ஸ்ரீரங்கன் நினைக்கவேண்டும்
சீரோடு வாழ்வதற்கு

ஸ்ரீரங்கா ஸ்ரீரங்கா
என்று தினம் வாழ்த்தும்மனம் !

# திருவடிகள்

ஸ்ரீரங்கன் திருவடியை
காவிரியாள் நனைக்கின்றாள்

ஸ்ரீரங்கன் சேவைக்காய்
கருடாழ்வான் காத்திருப்பான்

ஸ்ரீரங்கன் எதிர்நின்று
சேவிப்பான் அனுமனுந்தான்

ஸ்ரீரங்க கோபுரத்தை
தரிசித்து உய்வடைவோம் !

# தத்துவம்

ஸ்ரீரங்கத் தத்துவம்
ஸ்ரீரங்கமே அறியும்

ஸ்ரீரங்கத் தத்துவம்
ஆச்சார்யனும் அறிவான்

ஸ்ரீரங்கத் தத்துவம்
தமிழறியும், அதனால்தான்

ஸ்ரீரங்கத் தத்துவம்
நானறிய தமிழ்கற்றேன் !

# சரணாகதி

சரணாகதி அறியாமல்
தத்துவம் அறிந்தென்ன ?

சரணாகதி அடையாமல்
ஸ்ரீரங்கம் சென்றென்ன ?

சரணாகதி அடைந்ததனால்
ஆண்டாளும் பேறுபெற்றாள்

சரணாகதி அடைவதற்கு
ஸ்ரீதேவி துணை நிற்பாள் !

# ஆச்சார்யன் துணை

சரணாகதி அரிதரிது
தனியாக செல்பவர்க்கு

சரணாகதி மிகஎளிது
ஆச்சார்யன் துணை கொண்டால்

சரணாகதி அடைவதற்கு
தமிழன்னை தனைவாழ்த்தி

சரணாகதி அடைகின்றேன்
தமிழ்வேதம் துணைநிற்க !

# சூட்சுமம்

அனந்தன் சூட்சுமம்,
அறிதுயிலும் சூட்சுமம்,

தரங்கம் சூட்சுமம்,
தாயாரும் சூட்சுமம்

அரங்கம் சூட்சுமம்
அத்தனையும் சூட்சுமம்

ஆச்சார்யன் தாள்பற்ற,
அனைத்தும் புலனாகும் !

# வைராக்கியம்

பகவத் கீதையின்
பாசுரங்கள் வழிகாட்ட

பற்றற்று வாழ்வதன்
தத்துவம் தானறிக.

பற்றின்றி செயலோடு
நிற்கின்ற வித்தையை

கற்றும் கடைப்பிடித்தும்
வாழ்வதென்ன எளிதா ?

# சமர்ப்பணம்

ஆனாலும் நாம்தொடர்வோம்,
அனைத்தும் சமர்ப்பிப்போம்

மேநாளில் செய்தகர்மா,
செய்கர்மா, வரும்கர்மா

போனாலும் துரத்துகின்ற
அகங்காரம் தனைக்களைந்து

ஸ்ரீரங்கா ஸ்ரீரங்கா
என்றவனைச் சரணடைவோம் !

பொங்கல் நல்வாழ்த்துகள்



பக்தியுடன் வழங்கும்

**குற்றாலம் வள்ளிநாயகம்**


கவிஞர் மதுபாலிகா

கை பேசி-9940271554


Classic Prints 25513522